

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.04.2025) முகாம் அலுவலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி கூடுதலாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27–04– 2025) முகாம் அலுவலகத்தில், அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் வனத்துறை மற்றும் காதித் துறை அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.04.2025) முகாம் அலுவலகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கூடுதலாக மின்சாரத் துறை அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.04.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ் புதிதாக அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### வழக்குத் தாக்கல் செய்த ‘திராவிட மாடல்’ அரசும், வழக்கில் அருமையாக வாதிட்ட வழக்கறிஞர்களும், தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகளும்

# வரலாற்றில் என்றும் நிலைத்திருப்போம்!

## வாதிட்ட வழக்கறிஞர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஏப்.29-**

**“வழக்குத் தாக்கல் செய்த திராவிட மாடல் அரசும், வழக்கில் அருமையாக வாதிட்ட வழக்கறிஞர்களும், தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகளும் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுத்தந்த உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் உரையாற்றும் போது கூறினார்.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) சென்னையில் நடைபெற்ற, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத் தந்த மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்களுக்கான பாராட்டு விழாவில், உரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்குச் சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுத் தந்த உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களைப் பாராட்டி சென்னையில் நேற்று முன்தினம் (27.04.2025) மாலை, நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த விழாவை பாராட்டு விழா என்று சொல்வதைவிட, வெற்றி விழா என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! இந்திய அரசியல் சட்ட வரலாற்றில் எந்த மாநிலமும் எப்போதும் பெற்றிடாத இந்த மாபெரும் வெற்றிக்கு வித்திட்ட வழக்கறிஞர்களைப் பாராட்டி எல்லையில்லாத மகிழ்ச்சியோடு நாமெல்லாம் கூடியிருக்கிறோம்!

**நியமனப் பதவிகள் மூலம் - நமக்குத் தொல்லைகள் கொடுக்கும் காலம்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை – ஆளுநர் என்ற நியமனப் பதவி மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற எண்ணம் கொண்டு, போட்டி அரசுகளை நடத்த தொல்லைகள் கொடுக்கின்ற காலத்தில், மிக முக்கியமான இந்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் மாண்பமை பர்த்திவாலா, மாண்பமை மகாதேவன் அமர்வு வழங்கிய தீர்ப்பு - தமிழ்நாட்டுக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல; மக்களாட்சிக்கும் - மாநில சட்டமன்றங்களின் உரிமைகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி!

**ஒட்டுமொத்த மாநிலங்களும் - உச்சநீதிமன்றத்திற்கு வணக்கம்!**

ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் காலக்கெடு நிர்ணயித்தது மிகப்பெரிய வெற்றி!

“அரசியல் சாசன பிரிவு 142-இன் கீழ் உச்சநீதிமன்றத்திற்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது” - “இந்த மசோதாக்கள் அனைத்தும் உடனே சட்டமாகி நடைமுறைக்கு வருகிறது” என்று மாண்பமை நீதியரசர்கள் தீர்ப்பளித்தபோது, ஒட்டு மொத்த இந்திய மாநிலங்களும் தலைநிமிர்ந்து உச்சநீதிமன்றத்திற்கு வணக்கம் செலுத்தியது!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத் தந்த மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்கள் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் டாக்டர். அபிஷேக் சிங்வி, ராகேஷ் திவேதி, நாடாளுமன்ற உறுப்பினர் உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வின்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வரலாற்றுச் சாசனமாக நிலைக்கப் போகும் தீர்ப்பு!**

ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே இருக்கக்கூடிய அதிகாரப் பகிர்வில் மாநில அரசுகளின் உரிமைகளை எக்காலத்திலும் பாதுகாத்திடும் வரலாற்று சாசனமாக இந்த தீர்ப்பு என்றென்றும் நிலைத்திருக்கும். இன்னும் பெருமையோடு சொல்கிறேன். இது இந்திய மாநிலங்களுக்கு தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தால் பெற்றுத்தந்திருக்கக்கூடிய மாபெரும் விடுதலை!

இந்த அரசியல் உரிமையை - சட்டபூர்வமான வாதங்களின் மூலமாக தமிழ்நாடு அரசு முன்வைத்து வாதாடியது. அந்த அறிவார்ந்த வாதங்களுக்குச் சொந்தக்காரர்களான வழக்கறிஞர்கள்தான் இன்றைக்கு நம்மோடு இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக, தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் - முன்னாள் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்தகி அவர்களால் இந்த விழாவிற்கு வர இயலவில்லை. அவர் இங்கு இல்லையென்றாலும் தமிழ்நாடு அரசின் சார்பில் என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் - முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் - அபிஷேக்சிங்வி அவர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.
- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் - ராகேஷ் திவேதி அவர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.
- உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞரும் - மாநிலங்களவை உறுப்பினருமான வில்சன் அவர்களைத் தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

அறிவிற்சிறந்த வழக்கறிஞர் பெருமக்களே.....

**அனைத்து மாநில மக்களுக்கும் - மக்களாட்சிக்கும் கிடைத்த வெற்றி!**

உங்களின் வாழ்க்கையில் எத்தனையோ பெரிய பெரிய வழக்கு களைப் பார்த்திருப்பீர்கள். வெற்றியும் பெற்றிருப்பீர்கள். தனி நபர்கள் - அமைப்புகள் - ஏன், தனியொரு மாநிலம் கூட அந்த வழக்குகளில் வெற்றி பெற்றிருக்கும். ஆனால், இந்த வழக்கின் வெற்றி என்பது, இந்தியாவின் அனைத்துமாநிலங்களுக்கும்–அனைத்து மாநில மக்களுக்கும் - மக்களாட்சிக்கும் கிடைத்திருக்கும் வெற்றி!

இந்த மண்ணில் மக்களாட்சி இருக்கும் வரைக்கும், இந்த வழக்கும் - வலுவான வாதங்களை வைத்த நீங்களும் பேசப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள்!

**வரலாற்றில் நிலைத்திருப்போம்!**

வழக்குத் தாக்கல் செய்த தமிழ்நாடும் - வாதிட்ட நீங்களும் - தீர்ப்பளித்த நீதியரசர்களும் வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருப்போம் என்பது உறுதி!

**மாநில சுயாட்சி; அடைந்தே தீருவோம்!**

இந்த தீர்ப்பு கொடுத்திருக்கும் புத்துணர்ச்சி மற்றும் நம்பிக்கையோடுதான் மாநில சுயாட்சிக் குழுவை நாம் உருவாக்கியிருக்கிறோம்!

இந்திய ஜனநாயகத்தில் மக்களாட்சிக்கு வலுச்சேர்க்க, பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி, தலைவர் கலைஞர் அவர்கள் முழக்கமாக வடித்து கொடுத்ததுதான் “மாநிலத்தில் சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி” என்ற இலக்கு!

> **“உச்சநீதிமன்ற நீதிபதிகள் மாண்பமை பர்த்திவாலா, மாண்பமை மகாதேவன் அமர்வு வழங்கிய தீர்ப்பு - தமிழ் நாட்டுக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல; மக்களாட்சிக்கும் - மாநில சட்டமன்றங்களின் உரிமைகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி!”**

அந்த இலக்கை வென்றெடுக்க இந்தத் தீர்ப்பு வழிகாட்டி இருக்கிறது!

மாநில சுயாட்சியைப் பெறுவோம்!

கூட்டாட்சி இந்தியாவை உருவாக்குவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.